# என் தாய்

மாணவன்: எம். என். எம். அஷ்கர் (ஆண்டு - 01)

இலங்கை தீவினில் நின்றொரு
இளம் வாலிபன் பாடுகிறேன் - என்னை
ஈன்றெடுத்த அன்புத்தாயை
ஈருலகிலும் ஜயம் பெற வாழ்த்துகிறேன்.

கருவறையில் பத்து மாதம் சுமந்திருந்து
கஷ்டங்களை உணராது சகித்து - என்னை
இப்பாரில் பெற்றெடுத்த அன்னையை
இந்த இளம் வாலிபன்

தலைமீதேந்தி ஆயிரம் வருடம்
தவமிருப்பினும் கருவில் நான் அசைந்த
ஓர் அசைவுக்கும் ஈடாகாதே என் தவம்
ஓர் முறையாவது சிந்திக்குமா...? என் மனம்!

இடி மின்னல் தாங்காது அழுகிறதே வானம்
இவை விழுந்தும் அகழ்வாரைத் தாங்கிறது நிலம்
இதற்கு ஒக்கும் என் அன்னையின் சிற்றுள்ளம்
இதனை என்றும் என் நெஞ்சம் மறப்பதில்லை

நிகரில்லா வேதனையின் பின் - என்னை
நேர்வழியில் செல்ல அறிவூட்டி
கண்ணிமை போன்று என்னை வளர்த்தாள்
கருணை கடலாகிய என் தாய்

குறும்பு செய்யாமல் பாடத்தைக் கவனி
குட்டி நட்சத்திரமே...! என்று சொல்லி
அன்புடன் என்னை பாடசாலை அனுப்பி - எனக்கு
அறிவை கற்பித்தாள் என்னுயிர் தாய்

இருளைக் கிழித்து ஒளி வீசும் - இப்பாரில்
உதிக்கும் சூரியனைப் போல் - என்னில்
கஷ்டப்பட்டு அறிவூட்டி வளர்த்த - என்
அகம் நிறைந்த என் தாயை போற்றுகிறேன்

அன்னையின் சிரமம் சொற்பமானவை - அன்றி
எனக்காக செய்த தியாகம் ஆயிரம் கோடி
எப்படித்தான் கைமாறு செய்வேனோ...? நானறியேன்
என் உயிர்த் தாயின் தன்னலமற்ற தியாகங்களுக்கு